**CC No.27 /2023 அ.சா.3: மகாலிங்கம் த/பெ.வைரப்பெருமாள் நாள்: 13.11.2025**

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் BNSS பிரிவு 355 இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டது.)**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. நான் அறந்தாங்கி கள்ளுச்சந்து முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் அறந்தாங்கி முகவரியை குறிப்பிடவில்லை என்றால், சரிதான். எனது புகாரிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் நான் அறந்தாங்கி கள்ளுச்சந்தில் வசிக்கும் விவரத்தினை குறிப்பிடவில்லை என்று சொன்னால், தெரியவில்லை எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். நான் புகாரினையும், வழக்கறிஞர் அறிவிப்பினையும் படித்து பார்க்கவில்லை என்றால், சரிதான். நான் அறந்தாங்கியில் வசிக்கவில்லை என்றும், நீதிமன்ற அதிகார வரம்பிற்காக பொய்யாக அறந்தாங்கியில் வசிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. எனது புகாரிலும், பிரமாணபத்திரிக்கையிலும் சொல்லியுள்ள சிவக்குமார் என்பவர் எந்த முகவரியினை சேர்ந்தவர் அவர் எனக்கு எந்த வகையில் தெரிந்த நபர் என்ற விவரத்தினை குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால், சரிதான்.

2. நான் சொல்லுவது போல் எவ்வித சிவக்குமாரும் இல்லை. வழக்கிற்காக பொய்யாக ஒரு நபரை உருவாக்கி தேவைப்பட்டால் அவரை விசாரிப்பதற்கு வழக்கை ஜோடித்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. இவ்வழக்கின் எதிரி மாணிக்கம் எவ்வளவு நாள்களாக பழக்கம் என்றால், 7 வருடங்களாக பழக்கம். கடந்த 2017 ஆம் ஆண்டில் இருந்து பழக்கம். எதிரி 2017 ஆம் ஆண்டில் எதிரி எந்த ஊரில், எந்த முகவரியில் வசித்து வந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால், தெரியாது. எதிரியின் வீட்டு முகவரி எனக்கு தெரியாது. தஞ்சாவூர் அருகே மூல ஆஞ்சிநேயர் கோவில் அருகே என்று தெரியும்.

3. எதிரி எந்த பணியில் உள்ளார் என்று எனக்கு எப்பொழுது தெரியும் என்றால், 2018 ஆம் ஆண்டு பள்ளியில் பணிபுரிந்த விவரம் தெரியும். எந்த பள்ளி என்றும், என்ன பதவி என்ற விவரமும் தெரியாது. கடன் கொடுத்த சமயத்திலும் மேற்படி விவரங்களை தெரிந்து கொண்டேனா என்றால், தெரிந்து கொண்டேன். தஞ்சாவூர் வீரராகவா மேல்நிலைப் பள்ளியில் உதவி தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வந்தார். அந்த பள்ளிக்கு நான் சென்றதில்லை.

4. எதிரி என்னிடம் எப்பொழுது கடன் கேட்டார் என்றால், 2022 ஆம் வருடம் அக்டோபர் மாதம் தீபாவளி சமயத்தில் கேட்டார். வட்டிக்கு கேட்கவில்லை குடும்ப செலவிற்காகவும், அவசர தேவைக்காக உடனே கேட்டார். எவ்வளவு நாளில் எதிரி திருப்பி தருவதாக கூறினார் என்றால், ஒன்றறை மாதத்தில் தருவதாக கூறினார். எங்கு வைத்து எதிரி பணம் கேட்டார் என்றால், செல்போனில் கேட்டார். சிவக்குமார் செல்லில் இருந்து எனக்கு அழைத்து கேட்டார். எதிரி மாணிக்கம் எனக்கு போன் செய்தாரா என்றால், இல்லை.

5. பணம் கொடுத்த பின்பும் நான் எதிரி மாணிக்கத்திடம் போனில் பேசியதில்லை, நேரில் மட்டும் தான் பேசினேன். எதிரி மாணிக்கத்தின் போன் நம்பர் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். நான் எதிரியிடம் பழக்கமானதாக கூறும் நாளான 2017இல் இருந்து இதுவரை எதிரி மாணிக்கத்திற்கு நான் போன் செய்தது கிடையாது, அவரும் எனக்கு போன் செய்தது கிடையாது என்றால், சரிதான்.

6. பணம் எதிரி மாணிக்கத்திற்கு எப்பொழுது கொடுத்தேன் என்றால், 06.11.2022ஆம் தேதியில் கொடுத்தேன். அந்த சமயத்தில் யார் எல்லாம் எதிரியுடன் வந்தார்கள் என்றால், சிவக்குமார் மட்டும் வந்தார். காசோலை பணத்தினை நான் எவ்வாறு தயார் செய்தேன் என்று சொன்னால், வியாபாரத்தின் மூலம் கிடைத்த பணத்தினை கொண்டு கொடுத்தேன். நான் என்ன வியாபாரம் செய்கிறேன் என்றால், பர்னிச்சர் மற்றும் ஜவுளி வியாபாரம் செய்கிறேன். எனது வியாபாரத்திற்கு வங்கிக்கணக்கு உள்ளதா என்றால், இல்லை. TIN No. எனது வியாபாரத்திற்கு உள்ளதா என்றால், இல்லை. தற்சமயத்தில் நான் அந்த வியாபாரத்தினை தொடர்ச்சியாக செய்து வருகிறேன் என்றால், சரிதான். மேற்படி வியாபாரத்திற்கு தற்போதும் வங்கிகணக்கு இல்லை. சிறு வியாபாரமாக செய்து வருகிறேன். GST கணக்கு வியாபாரத்திற்கு வைத்துள்ளேனா என்றால், இல்லை.

7. நான் வியாபாரம் செய்யும் பர்னிச்சர் பொருட்களுக்கு விற்பனை செய்யும் கடை மற்றும் குடோன் போன்றவற்றுக்கு வாடகை ஒப்பந்தம் செய்துள்ளேனா என்றால், நான் எவ்வித கடை கட்டிடமும் பிடித்து வியாபாரம் செய்யவில்லை. மேற்படி கடன் தொகையினை எந்த நோட்டுகளாக கொடுத்தேன் என்றால், அனைத்து நோட்டுகளும் 500 ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேன். நான் சொல்லுவது போல் அறந்தாங்கியில் எந்த தொழிலும் வியாபாரமும் செய்யவில்லை என்றாலும், அறந்தாங்கியில் வசிக்கவில்லை என்றாலும், சரியல்ல. இந்த பணத்தை என்னுடைய வீடுள்ள அறந்தாங்கி கள்ளுச்சந்துவில் வைத்துக் கொடுத்தேன்.

8. நான் கடன் கொடுத்ததாக சொல்லும் 06.11.2022ஆம் தேதி எதிரி ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தில் பணியில் இருந்தார் என்றும், அவர் அறந்தாங்கி வரவில்லை என்று சொன்னால், சரியல்ல. நான் மேற்படி தேதி ஞாயிற்றுக்கிழமை என்பதால் எதிரி அறந்தாங்கிக்கு வந்தார் என்பதை பொய்யாக நீதிமன்றத்தில் தெரிவித்து அபலாபம் அடையும் கெட்ட எண்ணத்தில் மேற்படி தேதியில் எதிரி கடன் பெற்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1இல் உள்ளவற்றை யார் பூர்த்தி செய்தது என்றால், எதிரி தான் பூர்த்தி செய்தார் என்றால், தேதி உள்பட அனைத்தினையும், எதிரிதான் பூர்த்தி செய்தார்.

9. வா.சா.ஆ.1-ஐ 06.11.2022ஆம் தேதியில் தான் என்னிடம் கொடுத்தார் என்றால், சரிதான். வா.சா.ஆ.1இல் உள்ளவற்றை எதிரி பூர்த்தி செய்தார் என நான் பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தினை பூர்த்தி செய்ததினை கண்டுபிடிக்க எதிரி கையெழுத்துடன், கையெழுத்து வல்லுநர்களுக்கு அனுப்பினால் யார் பூர்த்தி செய்தார் என்ற விவரம் தெரியவரும் என்றால், ஆமாம் தெரியவரும்.

**எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையானது வேறு ஒரு தேதி ஒத்தி வைக்கப்படுகிறது.**